



# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






வெள்ளி ❖ மே. 20, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 225 ❖ ரூ.10


## மாநிலங்களவைத் தேர்தல் அதிமுகவுக்கு பாஜக-பாமக பச்சைகொடி

# ஆதரவு

**தமிழகத்தில் 6 ராஜ்யசபா எம்.பி., இடங்களுக்கு ஜுன் 10ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் வரும் 24ம் தேதி துவங்குகிறது. திமுக.,வுக்கு 4 எம்,பி.,க்களும், அதிமுக.,வுக்கு 2 ராஜ்யசபா எம்.பி.,க்களும் உறுதி**



**சென்னை, மே. 20:**

**ராஜ்யசபா தேர்தலுக்கான அதிமுக வேட்பாளர்களுக்கு பா.ஜ., மற்றும் பா.ம.க ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளது.**

தமிழகத்தில் 6 ராஜ்யசபா எம்.பி., இடங்களுக்கு ஜுன் 10ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் வரும் 24ம் தேதி துவங்குகிறது. சட்டசபையில் கட்சிகளின் எம்.எல்.ஏ.,க்கள் பலத்தின் அடிப்படையில் ராஜ்யசபா எம்.பி.,க்கள் தேர்வு செய்யப்படுவர். அதன்படி, திமுக.,வுக்கு 4 எம்,பி.,க்களும், அதிமுக.,வுக்கு 2 ராஜ்யசபா எம்.பி.,க்களும் கிடைக்கும். இதில் திமுக சார்பில் 3 வேட்பாளர்களை ஏற்கனவே அறிவித்தது. ஒரு எம்.பி.,க்கான இடத்தை கூட்டணி கட்சியான காங்கிரசுக்கு விட்டுக்கொடுத்தது திமுக.

அதிமுக தரப்பில் இதுவரை வேட்பாளர்களை அறிவிக்கவில்லை. இந்நிலையில், தங்களுக்கான 2 எம்.பி., இடங்களுக்கு அதிமுக எம்எல்ஏ.,க்கள் வேலுமணி, வைத்தியலிங்கம் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் பா.ஜ.,வின் ஆதரவையும் பெறுவதற்கு கமலாலயம் சென்று, தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலையை சந்தித்து பேசினர். பேச்சுவார்த்தைக்கு பின்னர், அதிமுக துணை ஒருங்கிணைப்பாளரும் எம்.எல்.ஏ.,வுமான வைத்திலிங்கம், அதிமுக வேட்பாளருக்கு பா.ஜ., ஆதரவளிக்கும் என உறுதி அளித்துள்ளதாக கூறினார்.

அதன்பின்னர், பாமக நிறுவனர் ராமதாஸை சந்தித்து அதிமுக மூத்த தலைவர்கள் ஆதரவு கோரினர். இதுதொடர்பாக ஜி.கே. மணி வெளியிட்டுள்ள அறிக்கையில், பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாசுவை அதிமுக மாவட்ட செயலாளர்களும், முன்னாள் அமைச்சர்களுமான சி.வி.சண்முகம், கே.பி. அன்பழகன், எம்.சி.சம்பத் உள்ளிட்டோர் அடங்கிய அதிமுக நிர்வாகிகள் குழு நேற்று காலை தைலாபுரம் தோட்டத்தில் சந்தித்து பேசினார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு 6 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக அடுத்த மாதம் நடைபெற உள்ள தேர்தலில் அதிமுக வேட்பாளர்களுக்கு பாமகவின் ஆதரவைக் கோரி அதிமுகவின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் எழுதிய

கடிதத்தை மருத்துவர் ராமதாசுவிடம் ஒப்படைத்தனர். மாநிலங்களவைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று அதிமுக குழுவினரும் கேட்டுக் கொண்டனர்.

அதிமுகவின் கோரிக்கை குறித்து கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் மருத்துவர் ராமதாசு, நடத்திய கலந்தாய்வில், அதிமுகவேட்பாளர்களை ஆதரிப்பது என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று கோயம்புத்தூர், வா உ சிதம்பரனார் மைதானத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் மற்றும் அவற்றின் மாதிரிகளின் கண்காட்சி மற்றும் தமிழ்நாடு அரசு கடந்த ஓராண்டில் ஆற்றிய அரும்பணி களின் தொகுப்பு ஓவியங்களின் கண்காட்சி ஆகியவற்றை தொடங்கி வைத்து பார்வையிட்டார். நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, தாமோ. அன்பரசன், மு.பெ. சாமிநாதன், செந்தில் பாலாஜி, கயல்விழி செல்வராஜ், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் கல்பனா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, மாவட்ட கலெக்டர் சமீரன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குனர் வீ.ப. ஜெயசீலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,755 | Rs.5,154 |




1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் துய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுட், நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

## இந்து சமய அறநிலையத்துறையின் புதுக்கோட்டை மாவட்ட உதவி ஆணையராக தி.அனிதா பொறுப்பேற்றுக் கொண்டார்



புதுக்கோட்டை மே.20–

இந்து சமய அறநிலையத்துறையின் புதுக்கோட்டை மாவட்ட உதவி ஆணையராக தி. அனிதா நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார். திண்டுக்கல் மாவட்டத்தில் உதவி ஆணையராக பணியாற்றி வந்த இவர், அங்கிருந்து பணியிட மாற்றம் செய்யப்பட்டு புதுக்கோட்டையில் உதவி ஆணையராக பொறுப்பேற்றுள்ளார். இவர் திண்டுக்கல்லில் பணியாற்றிய போது தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த 150 ஏக்கர் கோயில் நிலங்களை மீட்க நடவடிக்கை எடுத்தார். மேலும், இவர் கடந்த 2010 –ஆம் ஆண்டில் புதுக்கோட்டைமாவட்டம், திருப்புனவாசல்கோயிலில் நிர்வாக அதிகாரியாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. புதுக்கோட்டையில் உள்ள அலுவலகத்தில் உதவி ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்ட இவருக்கு அலுவலக ஊழியர்கள் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்துகளை தெரிவித்தனர்.




## சென்னை அமைந்தகரையில் பைக்கில் சென்றவரை வழிமறித்து அடையாளம் தெரியாத கும்பல் வெட்டி கொலை

சென்னை மே.20–

சென்னை அமைந்தகரையில் பட்டப்பகலில் பைக்கில் சென்றவரை அடையாளம் தெரியாத கும்பல் வழிமறித்து வெட்டி கொன்றது. இந்த கொலை தொடர்பான வீடியோ வைரலானதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



சென்னை சேத்துப்பட்டு வைத்தியநாதன் தெருவை சேர்ந்தவர் ஆறுமுகம் (36). இவர் சென்னை அமைந்தகரை புல்லா அவென்யூ பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது அடையாளம் தெரியாத 4 பேர் பைக்கில் குறுக்கே வந்து ஆறுமுகத்தை வழிமறித்து அரிவாளால் வெட்டி விட்டு தப்பி ஓடி விட்டனர். தகவல் அறிந்து அமைந்தகரை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து உயிருக்கு போராடிய ஆறுமுகத்தை சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி ஆறுமுகம் இறந்து போனார்.

அமைந்தகரை போலீசார் விசாரணையில், ஆறுமுகத்தின் மீது கீழ்பாக்கம் காவல் நிலையத்தில் ஆயுத தடை சட்டத்தின் கீழும், டிபி சத்திரம் காவல் நிலையத்தில் பெண் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும் மொத்தம் 5 வழக்குகள் நிலுவையில் இருப்பது தெரியவந்துள்ளது.

ஆறுமுகத்தை அடையாளம் தெரியாத கும்பல் பைக்கில் வந்து வெட்டி விட்டு தப்பி ஓடுவதை அந்த வழியாக காரில் சென்றவர் செல்போனில் வீடியோ எடுத்துள்ளார், இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. என்ன காரணத்திற்காக ஆறுமுகம் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவர்கள் யார்–யார் என்பது தொடர்பாக அமைந்தகரை போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அதே பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளையும் போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

## அரியலூர் மாவட்டம் தா.பழூரில் திமுக அரசின் ஓராண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்



அரியலூர் மே.20–

தா.பழூரில், திமுக அரசின்ஓராண்டுசாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, தா.பழூர் கடைவீதியில் நடைபெற்ற, திமுக அரசின் ஓராண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டத்துக்கு, அக்கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளரும், தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ் .எஸ். சிவசங்கர் தலைமை வகித்தார். தலைமை கழக பேச்சாளர்கள் தூத்துக்குடி சரத் பாலா, போடி கலைச்செல்வன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினரும், திமுக தா.பழூர் கிழக்கு ஒன்றியசெயலாளருமான, க .சொ. க. கண்ணன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் திமுக அரசின் ஓராண்டு சாதனைளை விளக்கி பேசினார்.

அதைத் தொடர்ந்து, தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ் .எஸ். சிவசங்கர் சிறப்புரை ஆற்றினார். மேலும் பாமக உட்பட, பல்வேறு கட்சிகளை சேர்ந்த நபர்கள் பலரும், திமுகவில் தம்மை ஐக்கியபடுத்திக் கொண்டனர். அவர்களுக்கு அமைச்சர் எஸ் .எஸ். சிவசங்கர் சால்வை அணிவித்து பாராட்டினார். திமுக மாவட்ட, ஒன்றிய, நகர, நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்ற இக்கூட்டத்தில், ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர் நாகராஜன் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் தென் மாவட்ட காங்கிரஸ் சார்பில் அறப்போராட்டம்



புதுக்கோட்டை மே.20–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் கடைவீதியில் உள்ள தகரகொட்டகை முன் காங்கிரஸ் சார்பாக அறப்போராட்டம் மாநில தலைவர் கே.எஸ். அழகிரி வழிகாட்டுதலின் படி தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ராம.சுப்புராம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வடக்கு வட்டார காங்கிரஸ் தலைவரும் ஊராட்சி மன்ற தலைவருமான முருகேசன், தெற்கு வட்டார தலைவர் அழகு ராமச்சந்திரன், தெற்கு மாவட்ட துணைத் தலைவர் இப்ராஹிம், வட்டார இளைஞர் அணி தலைவர் மணிகண்டன், ஒன்றிய கவுன்சிலர் கணேஷ் சுப்புராம், நகரத்தலைவர் முத்து ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ராம சுப்புராம் பேசுகையில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொன்ற கொலையாளிகள் 7 நபரை உச்சநீதிமன்றம் தான் கொலையாளிகள் என்று கூறி தண்டனை கொடுத்தது. அதே உச்ச நீதிமன்றம் சில சட்ட நுணுக்கங்களை சொல்லி பேறறிவாளனை விடுதலை செய்திருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை. அதே நேரத்தில் அவர்கள் குற்றவாளிகள் கொலைகாரர்கள் என்பதையும் நிரபராதிகள் அல்ல என்பதையும் அழுத்தமாக கூற விரும்புகிறோம். கொலை செய்தவர்கள் தமிழர்கள் அவர்கள் 31 ஆண்டுகளாக சிறையில் இருக்கிறார்கள். அதற்காக அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் தமிழக சிறைகளில் 20 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலை செய்யப்படாமலேயே இருக்கிறார்கள் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்கிற குரல் ஏன் எழவில்லை அவர்களெல்லாம் தமிழர்கள் இல்லையா ராஜீவை கொலை செய்தவர்கள் மட்டும் தான் தமிழர்களா? தமிழ் உணர்வு உள்ளவர்களா? இதற்கு பதில் அளிக்க வேண்டுகிறோம். மேலும் ராஜீவ்காந்தி கொலையின் போது காவல்துறையினர் மற்றும் அரசு அலுவலர்கள் இறந்து இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு தீர்வும் காணப்படவில்லை என்று அவர் பேசினார். வட்டார நகர கிளை நிர்வாகிகள் ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற முன்னாள் இந்நாள் தலைவர்கள் காங்கிரஸ் பேரியக்க தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## திருப்பரங்குன்றத்தில் தென் மாவட்ட ஒருங்கிணைந்த கலைஞர்கள் நல சங்க முப்பெரும் விழா



திருப்பரங்குன்றம் மே.20–

திருப்பரங்குன்றத்தில் தென் மாவட்ட ஒருங்கிணைந்த கலைஞர் நல சங்க முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் இயல், இசை, நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர் நல வாரிய அட்டை வழங்கினார்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சன்னதி தெருவில் உள்ள தனியார் மகாலில் தென் மாவட்ட ஒருங்கிணைந்த கலைஞர்கள் நல சங்க முப்பெரும் விழா நடைபெற்றது. தென் மாவட்ட ஒருங்கிணைந்த கலைஞர் நல சங்க தலைவர் ரஞ்சித் குமார் தலைமை வகித்தார். தலைவர் சோமசுந்தரம் முன்னிலை வகித்தார். செயலாளர் தெம்மாங்கு சீனிவாசன் வரவேற்புரை, கலைஞர்களுக்கான நலவாரிய அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகளை சப்தகிரி கூத்துப்பட்டறை தூக்கி வைத்து, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர் சிறப்புரை ஆற்றினார்.



புதுக்கோட்டை, திருவேங்கைவாசல் கோவிலிலுள்ள ஸ்ரீ யோக தட்சிணாமூர்த்திக்கு நேற்று வியாழக்கிழமையை முன்னிட்டு நடந்த சிறப்பு வழிபாட்டில் சுவாமிக்கு, பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர், சந்தனம், மஞ்சள் நீர், திருநீறு உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் மலர் அலங்காரத்தில் தீபாராதனை நடந்தது. கோவிலில் மூலவர் வியாக்ரபுரீசுவரர்க்கும் அம்மனுக்கும் சிறப்பு அபிஷேகம் மற்றும் மலர் அலங்காரத்தில் தீபாராதனை நடந்தது. பக்தர்கள் வந்திருந்து சுவாமியை வழிபட்டனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

## சென்னை அருகே பிளஸ்–1 மாணவியை பெண் கேட்டு ரகளை செய்த ரவுடியை தட்டிக்கேட்ட மூதாட்டி வெட்டிக்கொலை

சென்னை மே.20–

மாணவியை பெண் கேட்டு ரகளையில் ஈடுபட்டதை தட்டிக்கேட்ட மூதாட்டியை வெட்டிக்கொன்ற ரவுடியை போலீசார் கைது செய்தனர்.


சென்னையை அடுத்த ஆதம்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் நகர் 3-வது தெருவை சேர்ந்தவர் விக்கி என்ற விக்னேஷ் (28). ரவுடியான இவர் மீது 12 திருட்டு வழக்குகள் உள்பட 15 வழக்குகள் உள்ளன. கடந்த 6 மாதத்திற்கு முன்புதான் சிறையில் இருந்து வெளியே வந்த இவருக்கு அதே பகுதியை சேர்ந்த பிளஸ்-1 மாணவி மீது காதல் ஏற்பட்டது. இந்நிலையில் போதையில் வந்த விக்னேஷ், அந்த மாணவியின் வீட்டின் எதிரே நின்றபடி,



மாணவியை தனக்கு திருமணம் செய்து வைக்க கோரி ரகளையில் ஈடுபட்டார். அப்போது அருகில் உள்ள ஹேமாவதி என்பவரது வீட்டின் மீது கற்களையும் வீசினார். இதை கண்டித்த ஹேமாவதியை விக்னேஷ் கத்தியை காட்டி மிரட்டி கொண்டு இருந்தார். உடனே அங்கு வந்த ஹேமாவதியின் தாய் வெள்ளத்தா (61) என்பவர், விக்னேஷிடம் " ஏன் இப்படி குடித்து விட்டு தகராறு செய்கிறாய்? என தட்டிக் கேட்டார்.

இதனால் போதை தலைக்கேறிய நிலையில் இருந்த விக்னேஷ், கையில் இருந்த பட்டா கத்தியால் மூதாட்டி வெள்ளத்தாவின் தலையில் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பி ஓடிவிட்டார். இதில் படுகாயம் அடைந்த வெள்ளத்தா, ரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி வெள்ளத்தா பரிதாபமாக இறந்தார். ஆதம்பாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரத்தினகுமார் தலைமையிலான போலீசார், வெள்ளத்தா உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி வழக்குப்பதிவு செய்த போலீசார், வேளச்சேரியில் பதுங்கி இருந்த விக்னேசை கைது செய்தனர்.

## உளுந்தூர்பேட்டையில் பேறிவாளன் விடுதலையை எதிர்த்து காங்கிரஸ் கட்சியினர் அறவழிப் போராட்டம்



கள்ளக்குறிச்சி மே.20–

முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளியான பேரறிவாளனை உச்சநீதிமன்றம் தனது சிறப்பு சட்டத்தின் கீழ் விடுதலை செய்ததை கண்டித்து தமிழகம் முழுவதும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அறவழி போராட்டம் நடந்தது வந்த நிலையில், அதன் ஒரு பகுதியாக,

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் உள்ள ராஜீவ் காந்தி சிலை அருகே காங்கிரஸ் கட்சியினர் பேரறிவாளன் விடுதலையை எதிர்த்து வாயில் வெள்ளை துணி கட்டிக்கொண்டு அறவழிப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அறவழி போராட்டம் மாவட்ட தலைவர் ஜெய்கணேஷ் தலைமையிலும், சிறப்பு அழைப்பாளர்களாக கள்ளக்குறிச்சி மாவட்ட இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள் மோகன்தாஸ், மாதேஸ்வரன், வட்டார தலைவர்கள் சீனுவாசன், காளிராஜன், ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது,

போராட்டத்தில் வன்முறையை எதிர்ப்போம், கருத்து வேறுபாடுகளுக்கு கொலை செய்வது ஒரு தீர்வாகாது, நெஞ்சு பொறுக்குதில்லையே, என்ற வாசகம் எழுதிய பதாகைகளைஏந்தி அறவழி போராட்டம் செய்தனர்.

இந்நிகழ்வின் போது முன்னாள் மாவட்ட தலைவர் வழக்கறிஞர் இளையராஜா, நகரதலைவர் நல்ல குழந்தைவேல், மாவட்ட செயலாளர்கள் கோவிந்தராஜ், ராஜகோபால், சேவாதளம் மாவட்டதலைவர் முருகன், எஸ்.சி அணி மாவட்ட தலைவர் பெரியசாமி, வட்டார எஸ்.சி அணி விமல், மாவட்ட மகளிர் அணி தலைவி அமுதா, கள்ளக்குறிச்சி நகர்மன்ற உறுப்பினர் தேவராஜ், வட்டார தலைவர்கள் பெரியசாமி, ஷேக்ஷுவாத், ராமலிங்கம், திருநாவலூர் வட்டாரதலைவர்ரவி, கட்சி நிர்வாகிகள் கலைமணி, சீனுவாசன், மணி, காசிநாதன் கலியமூர்த்தி, சேகர், ராஜ்மோகன், கணேசன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அரசு மருத்துவர்களுக்கான ஊதிய உயர்வு 'புதிய அரசாணை வெளியிட நடவடிக்கை' – அமைச்சர் மா.சுப்ரமணியன்



சென்னை , மே.20:

100 ஆண்டு பழமையான சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையை 200 படுக்கை கொண்ட 40 கோடி ரூபாய் மதிப்பில் சிறப்பு மருத்துவமனையாக மேம்படுத்தப்படும் என அமைச்சர் மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு 2.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 14 டயாலிசிஸ் கருவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் செய்தியாளர்களை சந்தித்த போது பேசியதாவது, 'அரசு மருத்துவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது குறித்து அரசாணை 354 மற்றும் அரசாணை 293 உள்ளன.

இரண்டு அரசாணைகளையும் சேர்த்து புதிய அரசாணை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. 100 ஆண்டு பழமையான சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையை 200 படுக்கை கொண்ட 40 கோடி ரூபாய் மதிப்பில் சிறப்பு மருத்துவமனையாக மேம்படுத்தப்படும்.

கிண்டியில் 60 வயது கடந்த மூத்தோருக்கான மருத்துவமனை அமைக்கப்படும். இது குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒரு மாதத்தில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கிண்டியில் அறிவிக்கப்பட்ட 230 கோடி ரூபாய் மதிப்பிலான பன்னோக்கு அரசு மருத்துவமனையின் கட்டிட பணிகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளன என தெரிவித்துள்ளார்.

மேலும் கடலூரில் போலி மருத்துவர் சிகிச்சை கொடுத்து 5 வயது குழந்தை இறப்பு தொடர்பாக, மினி கிளினிக் இருந்தால் இச்சம்பவம் நடந்திருக்காது என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு கூறியதற்கு பதில் அளித்த அமைச்சர், குழந்தைகளுக்கான மருத்துவ சேவை அம்மா கிளினிக்கில் இருந்ததா? ஓராண்டுக்கான பணி என்று எழுதி வாங்கி கொண்டு தான் மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

போலி மருத்துவர் மற்றொரு மருத்துவரின் சான்றிதழ்களை கொண்டு ஐந்து வருடங்களாக செயல்பட்டு வந்துள்ளார். திமுக ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் தான் ஆகிறது. தகவல் தெரிந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C

♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ் ♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்

கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395

www.amirthamstores.co.in amirthammetals@gmail.com

# தஞ்சை குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பேரிடர் மேலாண்மை பயிற்சி




தஞ்சை , மே.20–

தஞ்சை குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் யூத் ரெட் கிராஸ் தன்னார்வலர்கள் ஆன மாணவிகளுக்கு ஒருநாள் பேரிடர் மேலாண்மை பயிற்சி வழங்கப்பட்டது.

பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வம் அவழிகாட்டுதலின் படியும், தஞ்சை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் எழிலன் ஆலோசனைப்படியும் தஞ்சை குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் யூத் ரெட் கிராஸ் தன்னார்வலர்கள் ஆன மாணவிகளுக்கு ஒருநாள் பேரிடர் மேலாண்மை பயிற்சி குந்தவை நாச்சியார் கல்லூரியில் நேற்று வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் யூத் ரெட் கிராஸ் மண்டல ஒருங்கிணைப்பாளர் வெற்றிவேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு துவக்கிவைத்து தலைமை உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து தஞ்சைமாவட்ட யூத்ரெட் கிராஸ் அமைப்பாளரும் மன்னர் சரபோஜி அரசு கல்லூரியின் பேராசிரியருமான முருகானந்தம் வாழ்த்துரை வழங்கினார். இந்த நிகழ்வில் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரியின் முதல்வர் சிந்தியா செல்வி மற்றும் பேராசிரியர் சுகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஒருநாள் பேரிடர் மேலாண்மை பயிற்சியை இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் பேரிடர் மேலாண்மை பயிறுநர் ஜான் பெஞ்சமின் யூத் ரெட் கிராஸ் தன்னார்வலர்களுக்கு வழங்கினார். இந்த பயிற்சியில் 130 யூத் ரெட் கிராஸ் தன்னார்வலர்கள் ஆனா மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இந்த நிகழ்வை தஞ்சை குந்தவை நாச்சியார் மகளிர் கலைக்கல்லூரியின் யூத் ரெட் கிராஸ் திட்ட அலுவலர் முனைவர் கிருஷ்ணபிரியா ஏற்பாடு செய்து ஒருங்கிணைத்திருந்தார்.

# கலாமின் உலக சாதனையில் இடம்பெற்ற வேலம்மாள் மாணவன்




சென்னை , மே.20:

சென்னையில் 'கலாமின் உலக சாதனை நிறுவனம்' இறை வழிபாட்டுடன் தொடர்புடைய இளம் குழந்தைகள் குறைந்த நேரத்தில் 10 பிரார்த்தனை ஸ்லோகங்கள் கூறுதல் என்ற போட்டியை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த இளம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் ஆவடி வளாகத்தில் உள்ள வேலம்மாள் வித்யாலயாவில் யு.கே.ஜி பயிலும் 5 வயது 4 மாதங்கள் நிறைவு பெற்ற செல்வன். ஜே.ஸ்கந்தவர்தன் பங்கு பெற்று 2 நிமிடங்களுக்கு குறைந்த நேரத்தில் தினசரி பிரார்த்தனை ஸ்லோகங்கள் வாசித்ததற்காக 'உலக சாதனை லெஜண்ட்' என்ற பட்டம் பெற்றார். அளப்பரிய சாதனைப் படைத்த அவரைப் பள்ளி நிர்வாகம் பாராட்டி வாழ்த்தியது.

# பேறிவாளன் விடுதலையை கண்டித்து வடசென்னை கிழக்கு மாவட்டம் எம். எஸ் திரவியம் தலைமையில் அறப்போராட்டம்






சென்னை , மே.20:

பழைய வண்ணாரப்பேட்டை தபால் நிலையம் அருகில் பேரறிவாளன் விடுதலையை கண்டித்து மன உணர்வை வெளிப்படுத்தும் வகையில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் அதன் தலைவர் எம்.எஸ் திரவியம் எம்.சி. தலைமையில் 'வன்முறையை எதிர்ப்போம், கருத்து வேறுபாடுகளுக்கு கொலை செய்வது ஒரு தீர்வாகாது' என்று எழுதிய பதாகையை கையில் ஏந்தி வாயில் வெள்ளை நிற துணியை கட்டிக்கொண்டு அறப்போராட்டம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக உ.பலராமன், எஸ்.ஏ.வாசு, டி.வி.துரைராஜ், சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் தீர்த்தி, சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மேலும் எம். நஜ்மா க்ஷெரிப், ராயபுரம் எஸ். ஏ. மொய்தீன் அக்பர், அப்துல்லா, கரிமுல்லா, வழக்கறிஞர் ஷாஜித், யோகேஷ்குமார், உபைத், ஜி. எம். இர்பான், கபூர் உள்ளிட்ட ராயபுரம், ஆர். கே.நகர், திருவொற்றியூர் தொகுதி மாநில நிர்வாகிகள், முன்னாள் மாவட்ட தலைவர்கள், உறுப்பினர்கள், சர்க்கிள் தலைவர்கள், மாவட்ட நிர்வாகிகள், பிரிவு மாநில, மாவட்ட நிர்வாகிகள், சர்க்கிள், வட்ட நிர்வாகிகள் மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் 500 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்

# பெரம்பூரில் வாகனங்களில் இருந்து பேட்டரி திருடும் மர்ம நபர் கைது



சென்னை , மே.20:

சென்னை பெரம்பூர் அடுத்த திருவிக நகர் காவல் நிலையம் உட்பட்ட பகுதிகளில் தொடர் கனரக வாகனங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் மூன்று சக்கர வாகனங்கள் போன்ற பல வாகனங்களில் இருந்து பேட்டரிகளை திருடிச் செல்லும் மர்ம நபரை போலீசார் கைது செய்தனர்.

தொடர்ந்து பேட்டரி காணாமல் போகின்றது என பலமுறை காவல் நிலையங்களில் புகார் வந்த நிலையில் பெரம்பூர் சரகம் உதவி ஆணையர் செம்பேடு பாபு தலைமையில் மேலும் திருவிக நகர் காவல் நிலையம் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வாளர் அன்புக்கரசன் மற்றும் குற்றப்பிரிவு ஆய்வாளர் முன்னிலையிலும் தனிப்படை போலீசார் மர்மநபரை பிடித்து கைது செய்யப்பட்டுள்ளனர் துரிதமாக செயல்பட்டு வந்த போலீசாரை அப்பகுதி மக்கள் பாராட்டி வருகின்றனர்

# குத்தாலம் அருகே ஆனாங்கூர் வடிவியம்மன் கோவில் தீமிதி திருவிழா



குத்தாலம்,மே.20:

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா ஆனாங்கூர் கிராமத்தில் சிறப்புமிக்க வடிவியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. கோவிலில் கடந்த 7–ஆம் தேதி அம்மனுக்கு பூச்சொரிதல் நடந்து விழா தொடங்கியது அதனைத் தொடர்ந்து காப்பு கட்டுதல் அம்பாள் வீதியுலா காட்சி காவடி வீதி உலா உள்ளிட்டவை நடந்தது விழாவின் முக்கிய நாளான நேற்று மே 19–ஆம் தேதி தீமிதி திருவிழா நடந்தது.

இதில் திரளான பக்தர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு மேளதாளங்கள் முழங்க வாண வேடிக்கையுடன் முக்கிய வீதிகள் வழியாக கோவிலை வந்தடைந்தனர். பின்னர் கோவிலின் முன்பு அமைக்கப்பட்டிருந்த தீ குண்டத்தில் தீ மிதித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். பின்னர் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஆனாங்கூர் கிராமவாசிகள் கோவில் நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# மயிலாடுதுறையில் நடைபெற்ற திமுகவின் ஓராண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்



மயிலாடுதுறை , மே.20:

திமுக அரசின் ஓராண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் மயிலாடுதுறை அருகே சீனிவாசபுரம் பகுதியில் நடைபெற்றது. திமுகவின் மாவட்ட கழக பொறுப்பாளரும், பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா முருகன் தலைமையில் நடைபெற்ற இந்த பொதுக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சரும் திமுக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினருமான பொன். முத்துராமலிங்கம் மற்றும் தலைமை கழக பேச்சாளர் துறையூர் துரைபாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம் பேசியபோது:

கடந்த அதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் அனைத்தும் தங்கமணி முதல் எடப்பாடி வரை கொண்டு சேர்ந்ததாகவும் மக்களுக்கு எந்தத் திட்டத்தையும் அதிமுக கொண்டுபோய் சேர்க்கவில்லை என விமர்சித்தார். திமுக ஆட்சியில் யாருக்காக திட்டம் உருவாக்கப்பட்டதோ அவர்களிடம் அந்த திட்டங்களை தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கொண்டு போய் சேர்த்திருப்பதாக கூறினார்.

இந்த நிகழ்ச்சி மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் , மயிலாடுதுறை நகர மன்ற தலைவர் செல்வராஜ் , பட்டமங்கல ஊராட்சி மன்றத்தலைவர் செல்வமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியில் பொதுமக்களுக்கு தென்னங்கன்று வழங்கப்பட்டது.

# கடலோர காவல் நிலைய ஊர்க்காவல் படைக்கு ஆட்கள் தேர்வு

புதுக்கோட்டை , மே.20:

கடலோர காவல் நிலைய ஊர்க்காவல் படைக்கு ஆட்கள் தேர்வு நடைபெற உள்ளதாக புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் செய்திக் குறிப்பு வெளியிட்டுள்ளது.

அச் செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது: புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளரை தளவாயாக கொண்டு செயல்படும் ஊர்க்காவல் படையில் புதிதாக ஒப்பளிக்கப்பட்ட 30 பணியிடங்களுக்கு, கடலோர பாதுகாப்பு காவல் நிலையங்களில் இணைந்து பணிபுரிய மணமேல்குடி, கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினம், மீமிசல் மற்றும் திருப்புனவாசல் பகுதியை சேர்ந்த தன்னார்வ தொண்டு உள்ளம் படைத்த மீனவ இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பத்தாம் வகுப்பு படித்திருக்க வேண்டும், 20 வயது முதல் 45 வயது வரை இருக்க வேண்டும், காவல்துறையை போன்று உடற்தகுதி இருக்கவேண்டும், குற்ற வழக்குகளிலும், அரசியல் கட்சிகள், ஜாதி ரீதியிலான அமைப்புகளிலும், அரசால் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களிலும், இயக்கங்களிலும் சம்பந்தப்பட்டவர்களாக இருக்கக் கூடாது. கல்விச் சான்றிதழ்களின் அசல் மற்றும் நகல் உடன் வரும் இருபத்தி நான்காம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு புதுக்கோட்டை எஸ்பி அலுவலகத்தில் நேரில் ஆஜராகி விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தாங்கள் தற்போது ஈடுபட்டுள்ள பணிகளுக்கு இடையூறு இன்றி செயல்படலாம் எனவும் மாத ஊதியம் எதுவும் வழங்கப்படாது பணி நாட்களுக்கு உரிய படித்துறை மற்றும் வழங்கப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருமருகல் அருகே 100 நாள் வேலைக்கான அட்டை வழங்கும் நிகழ்ச்சி



நாகப்பட்டினம், மே.20–

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் ஆலத்தூர் ஊராட்சியில் 100 நாள் வேலை பணியாளர்களுக்கு 2022–23–ம் ஆண்டுக்கான 100 நாள் வேலைக்கான அட்டைவழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஊராட்சிமன்ற தலைவர் பாலசுப்ரமணியன் தலைமை தாங்கினார்.

இதில் ஆலத்தூர், அருள்மொழிதேவன் பகுதியை சேர்ந்த 280 குடும்பத்தைச் சேர்ந்த 750–க்கும் மேற்பட்டவர்களுக்கு 100 நாள் வேலைக்கான அட்டை வழங்கப்பட்டது. இதில் ஊராட்சி செயலாளர் தமிழ்மணி, ஊராட்சிமன்ற துணை தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



► கடலூர் அனைத்து பொதுநல இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக, கடலூர் புதிய பேருந்து நிலையத்தை கடலூர் மையப்பகுதியான பாதிரிக்குப்பம் பைபாஸ் சாலையில் அமைக்க கோரி கடலூர் தலைமை தபால் நிலையம் அருகே ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# குத்தாலம் அருகே திருமணஞ்சேரி ஊராட்சியில் பகுதிநேர அங்காடி திறப்பு விழா மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்பு



குத்தாலம், மே.20:

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா திருமணஞ்சேரி ஊராட்சி அஞ்சாறுவார்த்தலை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பகுதிநேர அங்காடியை நேற்று மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமாரர் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியை குத்தாலம் கூட்டுறவு சார்பதிவாளர் வெங்கடேசன் தலைமை ஏற்று நடத்தினார். தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவர் பண்ணை நடராஜன் முன்னிலை வகித்தார்.

இதில் குத்தாலம் ஒன்றிய பெருந்தலைவர் மகேந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமதி, கஜேந்திரன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மனோகரன், திருமணஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் கணேசன், ஒன்றிய குழு உறுப்பினர் ராஜேஸ்வரி சங்கர், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் ஜீவானந்தம், கிராம நிர்வாக அலுவலர் ராதாலெட்சுமி, ஊராட்சி செயலர் சக்திவேல் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம மக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர். ஊராட்சி மன்ற துணை தலைவர் சரசு கணேசன் நன்றி உரையாற்றினார்.

## மயிலாடுதுறை மாவட்ட புதிய எஸ்.பி.அலுவலகம் கட்டுவதற்காக

# தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தை காவலர் வீட்டுவசதி வாரிய டிஜிபி விஸ்வநாதன் பார்வையிட்டார்



மயிலாடுதுறை , மே.20:

தமிழகத்தின் 38வது புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறையில் கலெக்டர் அலுவலகம் கட்டுவதற்காக மன்னன்பந்தல் அருகே பால்பண்ணை பகுதியில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான இடம் வாங்கப்பட்டு 114 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுமானப்பணிகள் நடந்துவருகிறது, புதிய மாவட்டத்திற்கு எஸ்.பி.அலுவலகம் தற்போது சீனிவாசபுரத்தில் வேளாண்மைத்துறை அலுவலக கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

இந்நிலையில் கடந்த சட்டசபை கூட்டத்தொடரில் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு புதிய எஸ்.பி.அலுவலகம் கட்டுவதற்காக 15.5 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. மயிலாடுதுறை புதிய கலெக்டர் அலுவலகம் கட்டப்படும் இடத்திற்கு அருகிலேயே எஸ்.பி.அலுவலகம் கட்டுவதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

அந்த இடத்தினை காவலர் வீட்டுவசதி வாரிய டிஜிபி ஏ.கே.விஸ்வநாதன் நேற்று மயிலாடுதுறை பால்பண்ணை பகுதியில் புதிய எஸ்.பி.அலுவலகம் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள 4.5 ஏக்கர் இடத்தினை பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். உடன் எஸ்.பி.நிஷா, இன்ஸ்பெக்டர்கள் சதீஷ், செல்வம் மற்றும் அதிகாரிகள் இருந்தனர். தொடர்ந்து மயிலாடுதுறை கலெக்டர் லலிதாவை நேரில் சந்தித்து பேசினார்.





# பருத்தி மற்றும் நூல் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய ஜவுளி துறை அமைச்சருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை

சென்னை மே.20-

பருத்தி மற்றும் நூல் விலை உயர்வை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும் என மத்திய மந்திரி பியூஷ் கோயலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

பருத்தி மற்றும் நூல் விலையை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மத்திய ஜவுளி துறை மந்திரியிடம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். மத்திய ஜவுளி துறை மந்திரி பியூஷ் கோயலை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். அப்போது, பருத்தி மற்றும் நூல்விலையைமத்திய அரசு உடனடியாககட்டுப்படுத்த வேண்டும். பருத்தி, நூல் விலை உயர்வால் தமிழகத்தில் ஜவுளி தொழில் எதிர்கொள்ளும் இடையூறுகளையும் விளக்கியுள்ளார்.

ஏற்கனவே மேற்கு மாவட்ட நாடாளுமன்ற எம்.பிக்கள் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து பருத்தி விலையை குறைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், நேற்று தொலைபேசி வாயிலாகமத்தியமந்திரியை தொடர்புகொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இதனிடையே, பருத்தி, நூல் விலை உயர்வால் தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே கடிதம் அனுப்பியது குறிப்பிடத்தக்கது.







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 4,755 | Rs. 5,154 |


# பேறிவாளன் விடுதலையை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் வாயில் வெள்ளை துணி கட்டி நூதன மௌன ஆறப்போராட்டம்



ஆலங்குடி,மே.20-

1991 ஆம் ஆண்டு சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் தற்கொலைப்படை மனித வெடிகுண்டால் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டார். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கடந்த 31 ஆண்டு காலமாக சிறையில் இருந்த பேரறிவாளன் நேற்றுமுன்தினம் உச்ச நீதிமன்றம் தீர்ப்பினால் விடுதலையாகி வெளியே வந்தார்.இது இந்திய அளவில் காங்கிரஸ் கட்சியினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இதைகண்டிக்கும் வகையில் உச்சநீதிமன்றத்தை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் நூதன முறையில் வாயில் துணியை கட்டிக்கொண்டு ஆலங்குடி வடகாடு முக்கத்தில் மௌன அறப்போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

முன்னதாக நூதன அறப்போராட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர் தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார். மாநில ஐஎன்டிசி பொதுக்குழு உறுப்பினர் மாணிக்கம் இளைஞர் நலன் கிராம மாவட்ட தலைவர் சரண் ஒன்றிய கவுன்சிலர் துரைக்கண்ணு ஆலங்குடி சட்டமன்ற தொகுதி துணைத்தலைவர் மனோஜ் மாவட்ட செயலாளர் கணேசன் ஆகியோர் முன்னிலையில் அறப்போராட்டத்தில் பெண்கள் உட்பட 25 க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.



▸ தென்காசி மாவட்டம் ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெறும் 75 ஆவது சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழா பல்துறை பணி விளக்கக் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள சித்த மருத்துவ அரங்கினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச. கோபால சுந்தர ராஜ், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா, தென்காசி திமுக மாவட்ட செயலாளர் சிவ.பத்மநாபன், மாவட்ட ஒன்றிய குழு தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர், வடகரை சேக் தாவுது, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் உஷா, மருத்துவர்கள் செல்வ கணேசன், ஞன பொன்மலர், கிறிஸ்டி, மேனகா, மருந்து ஆளுநர்கள் உஷா சுப்புலட்சுமி மருத்துவமனை பணியாளர்கள் ராமலட்சுமி, ரகு, சுபிதா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பிரேசிலில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான

# ஒலிம்பிக் போட்டியில் 3 தங்கப்பதக்கம் வென்று அசத்திய மதுரையை சேர்ந்த 12-ம் வகுப்பு மாணவி

மதுரை மே.20-

பிரேசிலில் நடைபெற்ற செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் 3 தங்கப்பதக்கம் வென்ற மதுரையைச் சேர்ந்த மாணவிக்கு தன் சொந்த நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கி பாராட்டியுள்ளார். வணிகவரி மற்றும் பத்திரப் பதிவு துறை அமைச்சர் மூர்த்தி.

பிரேசில் நாட்டில் நடைபெற்ற செவித்திறன் மாற்றுத் திறனாளிகளுக்கான 2022 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் இறகு பந்து போட்டியில் ஒற்றையர், கலப்பு இரட்டையர் மற்றும் குழு போட்டி ஆகிய மூன்று பிரிவுகளில் 3 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார் மதுரை அவனியாபுரத்தை சேர்ந்த பள்ளி மாணவியொருவர்.



மதுரை மாநகராட்சி அவ்வை மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவி ஜெர்லின் அணிகாவின் இந்த சாதனையை பாராட்ட, அவரை நேரில் அழைத்து வணிகவரி மற்றும் பத்திரப் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி பாராட்டியதுடன் ஒரு லட்சம் ரூபாய் ரொக்க பணத்தை ஊக்கத்தொகையாக வழங்கி உள்ளார்.

தங்கப்பதக்கம் வென்ற ஜெர்லின்அணிகாவைதமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்திக்க ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொண்டதால் தவறவிட்ட 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வை மாணவி எழுதவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

# அரியலூரில் பேறிவாளன் விடுதலையை எதிர்த்து காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்

அரியலூர் மே.20-

அரியலூரில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையில், குற்றவாளி என நீதிமன்றத்தால் குற்றம் சுமத்தப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி விடுதலை செய்யப்பட்டுள்ளார். பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்ட செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அரியலூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், அரியலூர் செட்டி ஏரி கரையில் உள்ள, காமராஜர் சிலை முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, கட்சியின் அரியலூர் மாவட்ட தலைவர் சங்கர் தலைமை வகித்தார். துணை போகாதே, துணை போகாதே, கொலையாளிகளுக்கு துணை போகாதே. உள்பட பல்வேறு கோஷங்களுடன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் நகர தலைவர் எஸ். எம். சந்திரசேகர், முன்னாள் நகர தலைவர் பழனிச்சாமி, நகர பொருளாளர் செந்தில், அரியலூர் வடக்கு வட்டார தலைவர் சீனிவாசன், தெற்கு வட்டார தலைவர் பாலகிருஷ்ணன், கட்சி நிர்வாகிகள் அமானுல்லா, மாமு சிவகுமார், தியாகராஜன், சகுந்தலாதேவி, உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



இதே கோரிக்கைகளை வலியுறுத்தி, அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஜெயங்கொண்டம், திருமானூர் உள்ளிட்ட ஊர்களிலும், காங்கிரஸ் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



▸ புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை அருகே உள்ள குப்பையன்பட்டி கிராமத்தில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வீரடிவிநாயகர் ஆலயத்தில் மஹா சங்கடகர சதுர்த்தி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவில் விநாயகருக்கு திரவியபொடி அபிஷேகம், சந்தன அபிஷேகம், பால்அபிஷேகம், தயிரபிஷேகம், அரிசிமாவு அபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம், இளநீர் அபிஷேகம், பன்னீர் அபிஷேகம் உள்ளிட்ட பதினோரு வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. பின்னர் விநாயகர் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டு வீரடிவிநாயகர் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

# பேறிவாளன் விடுதலை செய்யப்பட்டதை கண்டித்து மதுரை மாநகர் காங்கிரஸ் கமிட்டி சார்பாக அறவழிப் போராட்டம்

மதுரை, மே.20-

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டதை கண்டித்து, மதுரை மாநகர் காங்கிரஸ் கமிட்டி சார்பாக, தமிழ்நாடு காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ்.பி வரதராஜன் தலைமையில், மாநில பொதுக்குழு உறுப்பினர் மணிமாறன் மற்றும் காங்கிரஸ் மனித உரிமை துறை மாநில பொதுச்செயலாளர் பி.ஜே காமராஜ், மூத்த வழக்கறிஞர் பிஸ்மில்லாகான் ஆகியோர் முன்னிலையில், வாயில் வெள்ளை துணி கட்டி காங்கிரஸ் கட்சியினர் தங்களது எதிர்ப்புகளை தெரிவித்தனர்.



இந்நிகழ்வில் பஞ்சாயத்து ராஜ் மாவட்ட தலைவர் முத்துக்குமார், விவசாய பிரிவு தலைவர் ரவிச்சந்திரன், பகுதித் தலைவர்கள் பிச்சைவேல், பூக்கடை கண்ணன், பிலிம் ராதாகிருஷ்ணன், சக்திவேல், கிருஷ்ணகுமார், , பயில்வான் ராதாகிருஷ்ணன், கோபிநாத், ராதா, , பெருமாள், மாவட்ட பொதுச் செயலாளர் போஸ், சிறுபான்மை பிரிவு துணை தலைவர் மீர் பாஷா, ஐஎன்டியூசி குமார், மருதுராஜ், வடக்கு தொகுதி தலைவர் லெட்சுமி வீரவாஞ்சிநாதன், வார்டு தலைவர்கள் கோவிந்தராஜ், தினகரன், செல்வம், ராஜராஜ சோழன், கணேசன், பாஸ்கரன் முன்னாள் மாமன்ற உறுப்பினர் பாலு என்ற சுந்தரமகாலிங்கம் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பொன்னேரியில் தமிழக அரசின் ஓராண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்

## திமுக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்பு





**ஊத்துக்கோட்டை, மே20-**

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழக அரசின் ஓராண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பொன்னேரியில் உள்ள ஹரிஹரன் பஜார் வீதியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராசன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில், சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவரும், திமுகவின் கொள்கை பரப்புச் செயலாளருமான திண்டுக்கல் ஐ.லியோனி கலந்து கொண்டு 100 ஆண்டுகளில் செய்ய வேண்டிய பணிகளை ஓர் ஆண்டில் ஓய்வின்றி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்து வருவதாகவும், இதனால் இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக தமிழக அரசு திகழ்கிறது என்று கூறினார்.

டெல்லியில் கலைஞர் அறிவாலயம் மிக பிரம்மாண்டமாக அமைந்துள்ளது.இதனால் எதிர்காலத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கைநீட்டுபவர்தான் இந்தியாவின் பிரதமராக முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து பல்வேறு பொறுப்புகளில் பெண்களை அங்கம் வகிக்க செய்து பெண் உரிமையை காப்பாற்றியவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று பெருமிதத்துடன் கூறினார்.

நடைபெற்ற இக்கூட்டத்தில், தலைமைக் கழகப் பேச்சாளர் மதுரை சேவியர்,சி.எச்.சேகர், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி,பா.சே. குணசேகரன்,வெ. அன்பு வாணன்,எம்.எல்.ரவி, கவரப்பேட்டை திருமலை, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மு.மணிபாலன், கி.வே.ஆனந்தகுமார், ஆ.சத்தியவேலு,டி. கே.சந்திரசேகர் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, பேரூர்,கிளை கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.கூட்டத்தின் முடிவில்,மாவட்ட பிரதிநிதி வாசு நன்றி கூறினார்.







Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று அரசு முறைப் பயணமாக உதகைக்குச் சென்ற போது தோடர் பழங்குடியின மக்கள் வரவேற்பு அளித்தனர்.

# செம்பனார்கோயில் அருகே டூவீலரில் இருந்து விழுந்த பெண் சாவு நாய் சாலையின் குறுக்கே ஓடியதால் பரிதாபம்

**செம்பனார்கோயில், மே.20:**

மயிலாடுதுறை மாவட்டம் இளந்தோப்பு கிராமம் மெயின்ரோடு பகுதியை சேர்ந்த செந்தில்குமார் மனைவி மகேஸ்வரி (42). இத்தம்பதியினருக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர்.

இந்நிலையில் மகேஸ்வரி கடந்த 16-ஆம் தேதி சங்கரன்பந்தல் நந்தவன தெருவில் உள்ள தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் இளந்தோப்பு கிராமம் நோக்கி இரண்டு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். செம்பனார்கோயில் அருகே கீழ்மாத்தூர் பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது திடீரென சாலையின் குறுக்கே நாய்



ஓடியதால் மகேஸ்வரியின் கணவர் திடீரென தனது வாகனத்தை நிறுத்தம் செய்துள்ளார். அப்பொழுது நிலைதடுமாறி இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்த செந்தில்குமார் சிறிய காயங்களுடன் தப்பிக்க மகேஸ்வரிக்கு படுகாயம் ஏற்பட்டது.

கணவர் செந்தில்குமார் உறவினருக்கு தகவல் கொடுத்து அங்கு வந்த குடும்பத்தினர் அவர்களை முதல் உதவிக்காக மயிலாடுதுறை அழைத்து சென்றனர் கணவர் சிறிய சிராய்ப்புகள் உடன் உடல் தேறிய நிலையில் மனைவி மகேஸ்வரி கழுத்து முறிவு ஏற்பட்டு மோசமான நிலையில் இருந்ததால் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக சேர்த்தனர்.

அங்கு 17-ஆம் தேதி முதல் சிகிச்சை பெற்று வந்த மகேஸ்வரி நேற்று காலை பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து செம்பனார்கோயில் காவல் ஆய்வாளர் செல்வி மற்றும் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# சிறையில் நடந்த அறுவடை திருவிழா! சிறைவாசிகள் அசத்தல்!: புதுச்சேரி சிறையில் இயற்கை விவசாயம்



புதுச்சேரி மே.20-

புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில் காலாப்பட்டில் 36 ஏக்கர் பரப்பளவில் மத்திய சிறைச்சாலை அமைந்துள்ளது. இங்கு விசாரணை மற்றும் தண்டனை பெற்ற சுமார் 300 சிறைவாசிகள் இருக்கிறார்கள். அவர்களின் மன அழுத்தங்களைப் போக்குவதற்கும், தண்டனைக் காலம் முடிந்து வெளியே செல்லும்போது சுயதொழில் செய்ய பல்வேறு பயிற்சிகளை சிறை நிர்வாகம் அளிக்கிறது.

அரவிந்தர் ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீ அரபிந்தோ சொசைட்டி தொண்டு நிறுவனத்தின் சார்பில் ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் இயற்கை விவசாயம் குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. அதற்காகச் சிறை வளாகத்துக்குள்ளேயே 2½ ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பல ஆண்டுகளாகப் பயன்பாடின்றிப் புதர்மண்டிக் கிடந்த மண்ணை உழுது, பாத்திகள் பிரித்து, தெளிப்பு நீர்ப் பாசனம் அமைத்து அசத்தியிருக்கிறார்கள் சிறைவாசிகள். பல மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட 64 வகைப் பழச்செடிகள், 60 வகை மூலிகைச் செடிகளையும் நட்டு இயற்கை விவசாயம் நடக்கிறது.

வாழ்நாள் முழுதும் பழம் தரும் அன்னாசியை கொல்லிமலையிலிருந்து 10,000 செடிகளை கொண்டு வந்து பயிரிட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் வருவாய் கிடைப்பதாக சிறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். 1,350 வாழைகள், தக்காளி, கத்திரி, வாழை, தர்பூசணி, பப்பாளி, பச்சை மிளகாய், சுண்டக்காய், உளுந்து, சூரியகாந்தி, இஞ்சி, மஞ்சள், ஏலக்காய், ஆப்பிள், சாத்துக்குடி போன்றவற்றை பயிரிட்டு தினமும் சாகுபடி செய்து சிறையின் உணவுகூடத்தில் பயன்படுத்துகின்றனர்.



திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட சிறுநல்லூர் கிராமத்தை சேர்ந்த ப.பார்த்தசாரதி DME, BE, MBA,LLB இவர் கலாம் கல்வி ஏவுகனைக் களம் என்ற அமைப்பை நிறுவி கடந்த 11ஆண்டுகளாக பல்வேறு கிராம பகுதிகளிலும், பள்ளிகளிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்துவரும் நிலையில் கடந்த மாதம் ஏப்ரல் 28ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்ததை கொண்டாடும் விதமாக நெமிலி கிராமத்தில் உள்ள இளைஞர்களும், நேதாஜி சுபாஷ் சந்திரபோஷ் விளையாட்டு குழு பொறுப்பாளர்களும் இணைந்து பாராட்டுவிழா நடந்தினர்.

# தெலுங்கானாவில் தன் தோழியிடம் பேசிய சக மாணவரை கத்தியால் குத்திய பிளஸ் 2 மாணவன்

தெலுங்கானா மே.20-

தெலுங்கானாவில் தன் தோழியிடம் பேசிய ஆத்திரத்தில் தோழியுடன் படித்த மாணவரை பிளஸ் 2 மாணவன் கத்தியால் குத்திய அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

தெலுங்கானாவின் ரங்காரெட்டி மாவட்டத்தில் ராஜேந்திர நகர் பகுதியில் உள்ள பள்ளியில் படித்து வருபவர் துர்க பிரசாத். இவர் தன்னுடன் படித்து வரும் மாணவி ஒருவரிடம் எப்போதும் போல் பேசி வந்துள்ளார். இந்த நிலையில், அந்த மாணவியின் மற்றொரு தோழனான 12ம் வகுப்பு மாணவன் ஒருவன் இதனை கவனித்து ஆத்திரமடைந்து உள்ளான். தனது தோழியிடம் சக மாணவன் பேசி வந்தது பிளஸ் 2 படித்துவந்த மாணவனுக்கு பிடிக்கவில்லை. இதனால், அந்த மாணவனை ராஜேந்திர நகர் பகுதிக்கு தனியாக அழைத்து சென்ற பிளஸ் 2 படித்து வந்த மாணவன் திடீரென மறைத்து வைத்திருந்த கத்தியால் குத்தியுள்ளான்.

இதில் பலத்த காயமடைந்த அந்த மாணவனை போலீசார் மீட்டு மருத்துவமனையில் சேர்த்து உள்ளனர். இதுபற்றி பஞ்சாரா ஹில்ஸ் பகுதியின் காவல் ஆய்வாளர் நாகேஷ்வர் ராவ் தலைமையிலான போலீசார் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். தோழியிடம் சக மாணவர் பேசியது பிடிக்காமல் பிளஸ் 2 படித்து வந்த மாணவன் கத்தியால் குத்திய சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

## கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்

# சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்து ஆய்வு கூட்டம்



கள்ளக்குறிச்சி மே.20-

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கூட்டம் வருவாய் மற்றும் காவல் துறை அலுவலர்களுடன் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, மே மாதத்திற்கான ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் ஆட்சியர் ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் இம்மாதத்தில் நடைபெற்ற குற்றசம்பவங்கள் குறித்தும், சாலை விபத்துக்கள் குறித்தும், விபத்துக்களை தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆலோசிக்கப்பட்டது.

மேலும், மாவட்டத்தில் தொடர்ந்து, விபத்துகள் ஏற்படும் இடங்களை ஹாட்ஸ்பாட் கண்டறிந்து தகுந்த முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளவும், விபத்தினை தவிர்க்கும் பொருட்டு சாலை பாதுகாப்பு குறித்த விதிமுறைகளை பின்பற்ற வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களுக்கு தகுந்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் விஜய்பாபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுரேஷ், திருக்கோவிலூர் வருவாய்கோட்டாட்சியர் யோகஜோதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ரெத்தினமாலா, கள்ளக்குறிச்சி மண்டல போக்குவரத்து அலுவலர் ஜெயபாஸ்கரன், உளுந்தூர்பேட்டை மண்டல போக்குவரத்து அலுவலர் செந்தூர்வேல், அலுவலக மேலாளர் (குற்றவியல்) சிவசங்கரன், காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், அனைத்து வட்டாட்சியர்கள், வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதமபரனாரின் 150 வது பிறந்த நாளை முன்னிட்டு அவருடைய வாழ்க்கை வரலாற்றினை பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சி வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் க.வீ.முரளீதரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# அரியானாவில் சாலையோரம் தூங்கிக்கொண்டிருந்த புலம்பெயர் தொழிலாளர்கள் மீது லாரி மோதியதில் 3 பேர் பலி

அரியானா மே.20-

அரியானாவில் சாலையோரம் தூங்கிக்கொண்டிருந்த புலம்பெயர் தொழிலாளர்கள் மீது லாரி மோதியதில் 3 பேர் உயிரிழந்தனர். அரியானா மாநிலம், ஜாஜ்ஜார் மாவட்டத்தில் பாலம் கட்டுமானப் பணிக்காக உத்தரப்பிரதேசத்தில் இருந்து வந்திருந்த 18 புலம்பெயர் தொழிலாளர்கள் நெடுஞ்சாலையின் ஓரத்தில் தூங்கிக்கொண்டு இருந்தனர்.

அப்போது நிலைதடுமாறி வந்த லாரி ஒன்று புலம்பெயர் தொழிலாளர்கள் மீது மோதியது. இதில் மூன்று தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக மூத்த போலீஸ் அதிகாரி தெரிவித்தார். மேலும் 12 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். குண்ட்லி-மனேசர்-பல்வால் விரைவுச் சாலையில், ஆசோதா சுங்கச்சாவடியில் இருந்து சுமார் 2 கிமீ தொலைவில் அதிகாலையில் இந்த சம்பவம் நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநர், அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

தொழிலாளர்கள், அந்த வழியாக செல்லும் வாகனங்களை எச்சரிக்கும் வகையில், தடுப்புகளை அமைத்தும், ஒளி பிரதிபலிப்பான்களை பொருத்தியும் தங்கள் பாதுகாப்பினை உறுதிபடுத்தியுள்ளனர். அப்படி இருந்தும், இந்த விபத்தானது, ஓட்டுனர் குடிபோதையிலோ, அல்லது தூக்க கலக்கத்திலோ இருந்த போது கட்டுப்பாட்டை இழந்து ஏற்பட்டிருக்கலாம் என போலீசார் தெரிவித்தனர். லாரி பதிவு எண்ணைப் பயன்படுத்தி உரிமையாளரைக் கண்டுபிடித்த போலீசார், அவரிடம் இந்த சம்பவம் குறித்தும், ஓட்டுநர் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் குருப்–II மற்றும் குருப்–IIA தேர்விற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்



கள்ளக்குறிச்சி மே.20-

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், நாளை நடைபெறவுள்ள ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு குரூப்-II மற்றும் குரூப் -IIA தேர்விற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஸ்ரீதர் தலைமையில், மாவட்ட காவல்கண்காணிப்பாளர் செல்வக்குமார், முன்னிலையில் நடைபெற்றது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு குரூப்-II மற்றும் குரூப் -IIA முதல்நிலைத் தேர்வு நாளை முற்பகலில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக தேர்வுகள் சுமூகமாக நடத்திடவும், தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் இதர முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அதன்படி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள 5 வட்டங்களிலும் 66 தேர்வு மையங்களில் 19 ஆயிரத்து 612 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத உள்ளனர். இத்தேர்வில் முறைகேடுகள் ஏதும் ஏற்படா வண்ணம் தேர்வு கூடங்களை கண்காணித்திட துணை ஆட்சியர் நிலையில் 5 பறக்கும் படை அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் தலைமையில் 14 சுற்றுக்குழு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் விஜய்பாபு, தமிழ்நாடு தேர்வாணையத்தின் கள்ளக்குறிச்சி மாவட்ட மேற்பார்வையாளர் சசிகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுரேஷ், திருக்கோவிலூர் வருவாய்கோட்டாட்சியர் யோகஜோதி, மாவட்ட வழங்கல் அலுவலர் ஷெர்லிஏஞ்சலா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ரெத்தினமாலா, அனைத்து வட்டாட்சியர்கள், வருவாய்த்துறை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பட்டா கத்தியால் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடிய இளைஞர் கைது!



சென்னை மே.20-

சென்னையில் பட்டா கத்தியால் கேக் வெட்டி தனது பிறந்தநாளை கொண்டாடிய பரட்டை தலை ஹானஸ்ட்ராஜ் என்ற இளைஞரை போலீசார் சுற்று வளைத்து கைது செய்தனர். சென்னையில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு இளைஞர்கள் சிலர் பட்டாக் கத்தியுடன் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

இந்த வீடியோவை வைத்து சென்னை காவல்துறைசைபர்கிரைம் போலீசார் உதவியுடன் வீடியோவை வைத்து சம்பவத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் யார் என்பது தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர். இதற்கிடையில் பரட்டை தலையுடன், பட்டாக் கத்தியால் கேக் வெட்டி கொண்டாடிய திருமங்கலத்தைச் சேர்ந்த பழைய குற்றவாளி ஹானஸ்ட்ராஜ் என்பதை போலீசார் கண்டுபிடித்தனர். இதனையடுத்து பரட்டை



தலை ஹானஸ்ட்ராஜை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர்.

பட்டா கத்தியால் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடிய குற்றத்திற்காக போலீசார் தன்னை தேடுவதை அறிந்த பரட்டை தலை ஹானஸ்ட்ராஜ், போலீசார் தன்னை பிடித்துவிடக்கூடாது என்பதற்காக தனது பறட்டை தலைமுடியை வெட்டிவிட்டு கிளீனாக சுற்றி திரிந்துள்ளார். தலைமுடியை வெட்டிவிட்டு தலைமறைவாக அவரது வீடு இருக்கும் பகுதியில் சுற்றி வந்துள்ளார். இந்நிலையில், அவரை தீவிரமாக தேடி வந்த போலீசார் ஏற்கனவே அப்பகுதியில் கண்காணிப்பில் இருந்து வந்துள்ளனர். இதனை தொடர்ந்து முடியை வெட்டிவிட்டு சுற்றித்திரிந்த ஹானஸ்ட்ராஜை போலீசார் அடையாளம் கண்டு கைது செய்தனர்.

# உ.பி.யில் 17 வயது சிறுமியை கடத்தி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த காவலர் உட்பட இருவர் கைது

உத்தரபிரதேசம் மே.20-

உத்தரபிரதேசத்தில் 17 வயது சிறுமியை கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த காவலர் உட்பட இருவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

சிறுமி ஒருவரை இரண்டு மர்ம நபர்கள் சேர்ந்து பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குவது போன்ற வீடியோ, உத்தரபிரதேசத்தில் கடந்த இரண்டு நாட்களாக வைரலாக பரவி வந்தது. இந்த விவகாரம், சம்பந்தப்பட்ட சிறுமியின் பெற்றோருக்கும் தெரியவந்ததை அடுத்து, இது குறித்து அவரிடம் விசாரித்துள்ளனர்.

அப்போது அவர், தன்னை கடந்த வாரம் இரு மர்மநபர்கள் காரில் கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்ததாகவும், இதை வெளியே கூறினால் அந்த வீடியோவை சமூக வலைதளங்களில் வெளியிட்டுவிடுவதாகவும் மிரட்டியதாக தெரிவித்தார். இதையடுத்து, இச்சம்பவம் குறித்து சிறுமியின் பெற்றோர் அலிகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். இதன் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார், சிறுமி கடத்தப்பட்ட இடத்தில் இருக்கும் சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்தனர். இதில், அந்த சிறுமியை கடத்திய இரண்டு பேரில் ஒருவர் கன்னோஜ் மாவட்ட ஆயுதப் படையில் காவலராக பணிபுரியும் லகேந்திர சிங் (24) என்பது தெரியவந்தது.

இதனைத்தொடர்ந்து, போலீஸார் அவரை கைது செய்தனர். அவர் அளித்த தகவலின் அடிப்படையில், பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட அவரது நண்பர் அமித் குமார் (23) என்பவரும் கைது செய்யப்பட்டார். அவர்கள் இருவர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்தனர். காவலரே சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தது உத்தரபிரதேசத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளத



# அமைந்தக்கரையில் இளைஞர் ஆதம்பாக்கத்தில் மூதாட்டி கொலை

# மாநிலங்களவை தேர்தல் அதிமுகவுக்கு பாஜக பாமக ஆதரவு





# விரைவில் அரசு மருத்துவர்களுக்கான ஊதிய உயர்வு


| சென்னை / புதுக்கோட்டை | 20.05.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

20.05.2022 வெள்ளி

புதுகை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**அயோத்தி தாசர்** , தமிழகத் தமிழறிஞர் (பி, 1845) (இ. 1914)



**சந்திரசேகர சரசுவதி** , காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது தலைவர் (பி, 1894) (இ. 1994)



**எம். டி. இராமநாதன்** , இந்திய கருநாடக இசைப்பாடகர் (பி, 1923) (இ. 1984)



**மகாராஜபுரம் சந்தானம்** , கருநாடக இசைப் பாடகர் (பி, 1928) (இ. 1992)



## இன்றைய நினைவு நாள்

**மல்கர் ராவ் ஓல்கர்** , மராட்டியப் பேரரசர் (பி.1693) (இ.1766)



**த. பிரகாசம்** , சென்னை மாகாண முதல்வர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1872) (இ.1957)




**சா. தருமாம்பாள்** , தமிழக அரசியல்வாதி, சமூக செயற்பாட்டாளர் (பி.1890) (இ.1959)



## உலக தேனீ தினம்

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள்

# நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

தொடர்புக்கு: 04322 261577

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்